72

72

# பாரதி தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JAN 1949
MADRAS

V. நடராஜன், B.A., L.T.,
Divisional Inspector of Schools, Coimbatore

V. S. வெங்கடராமன் கம்பெனி
ம் : : கும்பகோணம்
[விலை 5 அணா

TB
031(2)
N48
146857

# ஆரம்ப பாடசாலைகளுக்கான
# புதிய
# பாடதிட்டம்
## தாய்மொழி

---

## இரண்டாம் வகுப்பு—6½ வயது முதல் 7½ வரை

I. வாய்மொழிப் பயிற்சி–(1) முதல் வகுப்புக்கு உதாரணமாகக் கொடுக்கப்பட்டவை போன்ற பல விஷயங்களைப்பற்றி, அதிக வார்த்தைகளை அறிந்து உபயோகிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும்படி சம்பாஷித்தல். சிறு தனிச் சம்பவங்களை ஆரம்பம் முதல் முடிவு வரை கோர்வையாக விவரித்துச் சொல்லப் பழக்குதல்.

(2) சிறு நாடகங்களையும், சிறு சம்பாஷணைகளையும் நடித்துக் காட்டுதல்.

(3) அதிகமான குழந்தைப் பாட்டுகளும் அபிநயப் பாட்டுகளும்.

II. வாசிப்பு—(1) பாட புத்தகம் அல்லது வார்த்தைகளும் வாக்கியங்களும் எழுதியுள்ள அட்டைகள் முதலியவற்றை உபயோகித்துப் படித்தல்—400 புதிய வார்த்தைகள் கற்பித்தல்.

(2) மௌன வாசிப்பு:—100-க்கு உரக்க வாசிப்பது 60 பங்கும், மௌன வாசிப்பு 40 பங்கும் இருக்கவேண்டும்.

(a) அட்டையில் அல்லது கரும்பலகையில் எழுதப்பட்ட உத்தரவுகளையும், கைவேலை, கிரியாமுறைப் பாடம் (PROJECT) முதலியவற்றிற்காக எழுதிப் போட்ட குறிப்புகளையும் மௌனமாய்ப் படித்து அவற்றின்படி நடத்தல் மௌன வாசிப்பின் ஓர் அம்சமாகும். (b) தலைப்பு I (2-ம்) பிரிவிற் குறிப்பிட்ட நாடகங்களையும் சம்பாஷணைகளையும் நடிப்பதற்கு முன் மௌனமாக வாசித்தல்.

III. எழுதுதல்:— எழுதுகோலைச் சரியான முறையில் பிடிக்கவும், தெளிவாகவும் வேகமாகவும் எழுதவும் வற்புறுத்தல். படித்த விஷயங்களில் கேட்கும் கேள்விகட்குச் சுருக்கமாய் ஒரு வாக்கியத்தில் விடை எழுதும் திறமை வளர்த்தல்.

உபகரணங்கள்—முதல் வகுப்பிற்கு உள்ளபடி.

---

# பாரதி தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

V. நடராஜன், B. A., L. T.
Divisional Inspector of Schools, Coimbatore

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
[1—6—48 கெஜட்டின் (I-ம் பாகம்) 8-ம் பக்கமும்,
1—6—48 கெஜட்டின் (II-ம் பாகம்) 22-ம் பக்கமும் பார்க்க]

**V. S. வெங்கடராமன் கம்பெனி**
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 5 அணா

Reprinted : November 1948

Sri Mahabharatham Press, Kumbakonam. Copies: 3,100

# முன்னுரை

துரைத்தனத்தார் சமீப காலத்தில் வெளியிட்ட புதிய பாட திட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் தாய்மொழிப் போதனையின் நோக்கத்தையும் முறையையும் முற்றிலும் தழுவி இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாலர்களின் தினசரிப் பேச்சிலும், அநுபவத்திலும் விரவி வரும் சொற்களையும் விஷயங்களையுங்கொண்ட பாடங்கள் மூலம் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மூவிதப் பயிற்சிகளும் இப் புத்தகத்தில் அமைந்துள. வாய்மொழிப் பயிற்சிக்குச் சாதகமாக நடித்துக்காட்டக்கூடிய கதைகள், சம்பாஷணைகள், குழந்தைப் பாட்டுக்கள், செய்தி சொல்லல் இவை அடங்கிய பாடங்களும் இதில் காணப்படும்.

பாலர்களுக்கு விளங்காத அரும்பதங்களை விலக்கி, அவர்களது பேச்சுப் பழக்கத்திலுள்ள சொற்களைக்கொண்டே பாடங்கள் கொடுக்கப்பட்டுப் படிபபடியாக அதிகச் சொற்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்புத்தகத்தில் வந்துள்ள புதிய சொற்கள் சுமார் 430 ஆகும். இச்சொற்கள், பல பள்ளிக் கூடங்களில் இந்த வகுப்புப் பிள்ளைகளிடம் பரீட்சை செய்து தேர்ந்தெடுக்கப்பட்டவை.

தடுமாற்றமின்றி வாசிக்க இளைஞர்களைப் பழக்குவதற்குக் கீழ் வகுப்புக்களில் உரக்கப் படித்தல் அவசியமெனினும், காலக் கிரமத்தில் அவ்விதம் படிப்பதைக் குறைத்து, மௌன வாசிப்பை வற்புறுத்தல் புதிய திட்டத்தின் முக்கிய அம்சமாகும். மௌனப் படிப்பினால் பிள்ளைகள் பாடத்தில் கருத்தைச் செலுத்தி விஷயங்களைக் கற்றல் இயலும். இவ்விதம் பாலர்களின் சுயமுயற்சியைப் பெருக்கி உற்சாகத்துடன் கற்கச்

செய்வதால், அவர்களுக்குத் தாமே இப்புத்தகத்திலுள்ளதை யும், மேலும் மேலும் வேறு புத்தகங்களையும் படிக்க ஆசை யுண்டாகும். சம்பாஷணை, படம் படித்தல், படித்துச் செய்யும் புதுமுறைப் பயிற்சிகள் இவ்வகையான பாடங்களைப் பிள்ளைகள் மௌனமாகவே படித்து நடிக்கவும், விடை கண்டுபிடிக்கவும் வேண்டும். இவ்வித மௌனப் படிப்பு இவ்வகுப்பில் நூற்றுக்கு நாற்பது வீதமாகும். இலகுவான கைத்தொழிற் பாடங்களும், சிறிய சம்பவங்களை விவரித்துச் சொல்லுவதற்கான பாடங் களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வாசிக்கும் வேகமும், எழுதும் வேகமும் நாளடைவில் அதிகரிக்கும்படி செய்வது மற்றும் ஓர் அம்சமாகும். இதுபற்றி, கொடுத்த விஷயத்தைக் குறிப்பிட்ட நேரத்தில் வாசித்து முடிக்கவும், எழுதி முடிக்கவும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள.

அநுபவ முறையில் எழுதப்பட்டுள்ள இப் **பாரதி இரண்டாம் வாசகம்** மிக்க பயன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

V. நடராஜன்

# பொருளடக்கம்


| பாடம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | படத்தைப் பார்த்துச் சொல் | ... | 1 |
| 2. | படத்தில் காட்டு | ... | 2 |
| 3. | படத்தில் குறி | ... | 3 |
| 4. | என்ன செய்கிறார்கள்? | ... | 5 |
| 5. | எத்தனை? | ... | 6 |
| 6. | தாயும் குழந்தையும் | ... | 8 |
| 7. | அணில் | ... | 10 |
| 8. | படித்துச் செய் | ... | 10 |
| 9. | கேள்வி—பதில் | ... | 11 |
| 10. | ரோஜா புஷ்பம் | ... | 12 |
| 11. | சுந்தரம் | ... | 14 |
| 12. | விளையாட்டுச் சாமான்கள் | ... | 15 |
| 13. | எங்கே காணலாம்? | ... | 17 |
| 14. | வீடு | ... | 18 |
| 15. | உண்டு : இல்லை | ... | 20 |
| 16. | செல்லப் பிராணிகள் | ... | 21 |
| 17. | பூனைக்குட்டிகள் (பாட்டு) | ... | 23 |
| 18. | நரியும் பூனையும் | ... | 24 |
| 19. | வீட்டுச் சாமான்கள் | ... | 26 |
| 20. | குழந்தைப் பாட்டு | ... | 28 |
| 21. | தாயும் மகனும் | ... | 29 |
| 22. | நான் யார்? | ... | 30 |
| 23. | பாடசாலை | ... | 31 |
| 24. | பருத்தி நூல் | ... | 32 |
| 25. | நடந்ததைச் சொல்லல் | ... | 31 |
| 26. | ஆலமரமும் பூசணிக்கொடியும் | ... | 34 |

| பாடம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 27. | ஆலமரம் (பாட்டு) | ... 36 |
| 28. | சூரியன் | ... 37 |
| 29. | நாட்கள் : மாதங்கள் | ... 39 |
| 30. | படம் படித்தல் | ... 41 |
| 31. | மண் பாண்டங்கள் | ... 42 |
| 32. | குல்லாய் வியாபாரியும் குரங்குகளும் | ... 44 |
| 33. | காற்றாடி செய்தல் | ... 46 |
| 34. | பொங்கல் பண்டிகை | ... 48 |
| 35 | குதிரை விளையாட்டு | ... 50 |
| 36. | உணவு | ... 52 |
| 37. | தின்னலாம் : தின்னக்கூடாது | ... 54 |
| 38. | உண்மையுள்ள கனகம் | ... 55 |
| 39. | உலாவுதல் | ... 57 |
| 40. | உடலின் உறுப்புக்களும் வயிறும் | ... 59 |
| 41. | இரண்டு பரதேசிகள் | ... 61 |
| 42. | செல்லக் கிளியே ! | ... 66 |

# பாரதி தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

### 1. படத்தைப் பார்த்துச் சொல்

1. படத்தைப் பார். அதிலுள்ள பொருள்களின் பெயர்களைச் சொல்.




| | | |
|---|---|---|
| 2. பசு மாடு | நீ வா. | மணி அடி. |
| மைல் கல் | பூ தா. | ஈ பார். |
| வாழை இலை | பை தை. | இலை போடு. |
| மயில் கண் | கை வை. | அணா கொடு. |

3. படத்திலுள்ள பொருள்களின் பெயர்களை எழுது.

# 2. படத்தில் காட்டு




1. இவைகளைப் படத்தில் காட்டு:—

| | | |
|---|---|---|
| ரூபாய் | தொட்டி | குருவிக் கூடு |
| ஊதல் | விளக்கு | குருவிக் குஞ்சு |
| பூட்டு | விசிறி | மாட்டு வண்டி |
| குடம் | குருவி | பாக்கு வெட்டி |

2. விளக்கு ஏற்று. குடம் கழுவு.
ரூபாய் தா. கதவைப் பூட்டு.
விசிறி வாங்கு. வண்டி ஓட்டு.

3. படத்திலுள்ள பொருள்களின் பெயர்களை எழுது.

# 3. படத்தில் குறி



1. வார்த்தைகளின் இலக்கத்தை அதற்குச் சரியான படத்திற்கு அருகில் குறி :

| | |
|---|---|
| 1. அடுப்பு | 6. தேங்காய் |
| 2. நொண்டி | 7. மாங்காய் |
| 3. பட்டம் | 8. டம்ளர் |
| 4. பம்பரம் | 9 ஆட்டுக்குட்டி |
| 5. கற்பலகை | 10. மோட்டார் வண்டி |

2. பம்பரம் சுற்று.

பட்டம் பறக்கவிடு.

மாங்காய் புளிக்கும்.

தேங்காய் தித்திக்கும்.

கண்ணன் என் அண்ணன்.

ஆட்டுக்குட்டி வீட்டில் வளரும்.

கன்றுக்குட்டி துள்ளிக் குதிக்கும்.

மோட்டார் வண்டி வேகமாக ஓடும்.

ஆண்டி ஒருவன் தோண்டி வாங்கினான்.

நொண்டி ஒருவன் வண்டி ஏறினான்.

தோசை சுட்டால் ஓசை கேட்கும்.

3. படத்திலுள்ள பொருள்களின் பெயர்களை எழுது.

4. 'ண' 'ன,' 'ட்' வரும் வார்த்தைகளை எடுத்து எழுது.

# 4. என்ன செய்கிறார்கள்?

1. கோடிட்ட இடங்களில் இந்த வார்த்தைகளைப் பொருந்தும்படி எழுது. பிறகு வாசி.

படிக்கிறான், ஓடுகிறாள், நூற்கிறாள், தைக்கிறான், சமைக்கிறாள், வெட்டுகிறான், புடைக்கிறாள், உழுகிறான்.



சீதை ——.



பையன் ——.



அப்பா ——.



மாமி நூல் ——.



குடியானவன் ஏர் ——.



இவன் மரம் ——.



வேலைக்காரி அரிசி ——.



தையல்காரன் துணி ——.

2. விடை சொல்:—

எவள் ஓடுகிறாள்?

எவன் ஏர் உழுகிறான்?

மாமி என்ன செய்கிறாள்?

தையல்காரன் என்ன செய்கிறான்?

# 5. எத்தனை ?



ஒரு புத்தகம்



மூன்று புத்தகங்கள்



இது ஒரு விசிறி.



இவை ஏழு விசிறிகள்.

எத்தனை என்று எண்ணிக் கோட்டில் எழுது:—

1. இந்தக் கட்டில் எத்தனை பென்சில்கள் ?



இந்தக் கட்டில் — பென்சில்கள்.

2. இந்த வளையத்தில் எத்தனை சாவிகள் ?



இந்த வளையத்தில் — சாவிகள்.

படத்தைச் சேர்த்து வாசி :—

இவை ஆறு  .

இங்கே ஐந்து  இருக்கின்றன.

தெரிந்துகொள் :—

| | | | |
|---|---|---|---|
| நாய் | — நாய்கள் | பழம் | — பழங்கள் |
| செடி | — செடிகள் | பூ | — பூக்கள் |
| கண் | — கண்கள் | பல் | — பற்கள் |
| மீன் | — மீன்கள் | புத்தகம் | — புத்தகங்கள் |

பூர்த்தி செய் :—

| | | | |
|---|---|---|---|
| ஆடு | —— | —— | கற்கள் |
| —— | பந்துகள் | ஈ | —— |
| மரம் | —— | கிணறு | —— |

# 6. தாயும் குழந்தையும்



இந்தப் படத்தைப் பார்.

இதில் தாயும் குழந்தையும் இருக்கிறார்கள்.



இதோ பார்! ஒரு நாயும் அதன் குழந்தையும் இருக்கின்றன.

நாயின் குழந்தை
நாய்க்குட்டி.



ஆட்டின் குழந்தை
ஆட்டுக்குட்டி.



பூனையின் குழந்தை
பூனைக்குட்டி.



பசுவின் குழந்தை
கன்றுக்குட்டி.

கோழியின் குழந்தை கோழிக்குஞ்சு.

எலியின் குழந்தை எலிக்குஞ்சு.

அணிலின் குழந்தை அணிற்பிள்ளை.

கிளியின் குழந்தை கிளிப்பிள்ளை.

பொருந்தும்படி சேர்த்து வாசி. பிறகு எழுது:—

உதாரணம்:—

| | |
|---|---|
| தென்னை | குஞ்சு |
| குருவி | பிள்ளை |

தென்னம்பிள்ளை

குருவிக்குஞ்சு

| | |
|---|---|
| தென்னை | கன்று |
| வாழை | குட்டி |
| குதிரை | குஞ்சு |
| கோழி | பிள்ளை |
| எருமை | கன்று |
| துளசி | குட்டி |
| மா | கன்று |
| கழுதை | செடி |



## 7. அணில்

அணிலே! அணிலே!
அழகிய அணிலே!
வாலைத் தூக்கி மரத்திலேறிக்
காயைப் பறித்துக் கையில் வைத்து,
பல்லால் கடித்து அழகாய்த் தின்னும்
அணிலே! அணிலே!
அழகிய அணிலே!

---

## 8. படித்துச் செய்

படித்துச் செய்:—

எழுந்து நில்.
வலது கையை நீட்டு. மடக்கு. தொங்கவிடு.
இடது கையை நீட்டு. மடக்கு. தொங்கவிடு.
வலதுபுறம் திருப்பு. நேரே திருப்பு.
இடதுபுறம் திருப்பு. நேரே திருப்பு.
கற்பலகையை எடு. உன் இடது கையை விரித்து,
சிலேட்டில் அழுத்தி வை. ஐந்து விரல்
களைச் சுற்றிக் கோடு இழு. கீழே வை.
சலாம் செய். உட்கார்.

## 9. கேள்வி—பதில்

[ ஒருவன் கேட்க, இன்னொருவன் தன் கையைப் பின்புறமாக மறைத்துக்கொண்டு பதில் சொல்லவேண்டும். ]

| | | |
|---|---|---|
| 1. | கை எங்கே ? | காக்கா கொண்டுபோனது. |
| 2. | காக்கா எங்கே ? | புளிய மரத்திலே. |
| 3. | புளிய மரம் எங்கே ? | வெட்டிவிட்டேன். |
| 4. | வெட்டின கட்டை எங்கே ? | அடுப்பு எரித்தேன். |
| 5. | அடுப்பு எரித்த சாம்பல் எங்கே ? | பல் தேய்த்தேன். |
| 6. | பல் தேய்த்த இடம் எங்கே ? | புல் முளைத்துவிட்டது. |
| 7. | புல் எங்கே ? | குதிரை தின்றுவிட்டது. |
| 8. | குதிரை எங்கே ? | கோபுர வாசலிலே. |

விளையாட்டு :

ஒரு பையனைக் கூப்பிடு. அவனுடைய கைகளைப் பின்னால் ஒளித்து வைத்துக்கொள்ளச் சொல். புத்தகத்தைப் பாராமல் நீ ஒவ்வொரு கேள்வியாகக் கேள். அவன் பதில் சொல்லுவான்.

# 10. ரோஜா புஷ்பம்

ரோஜா



புஷ்பம்





ஸரஸ்வதி

லக்ஷ்மி



ஸ்ரீ

ஹனுமான்

ஜ ஸ ஹ ஷ க்ஷ ஸ்ரீ

| | | |
|---|---|---|
| புஸ்தகம் | வருஷம் | ஜலம் |
| ரஸம் | புருஷன் | ஜாடி |
| ஸாமான் | பாஷை | ஜில்லா |
| ஸுந்தரம் | ஜுரம் | ஜலதோஷம் |
| வேஷ்டி | ஜுலை | ஹாரம் |



மஹாத்மா காந்தி

ஸ்ரீநிவாஸன்

ரோஜா புஷ்பம் வெகு அழகு.

பக்ஷி = பட்சி

பரீக்ஷை = பரீட்சை

பாரதி = ஸரஸ்வதி

பாரதி வாசகம் = ஸரஸ்வதி வாசகம்

# 11. சுந்தரம்



என் பெயர் சுந்தரம்.

என் தாயார் பெயர் மங்களம்.

என் தகப்பனுர் பெயர் வேலுப் பிள்ளை.

நான் பிறந்த ஊர் சிதம்பரம்.

எனக்கு ஒரு அண்ணன் இருக்கிறுன்.

எனக்கு ஒரு தங்கையும் இருக்கிறுள்.

என் வயது ஆறு.

நான் படிப்பது இரண்டாம் வகுப்பு.

நான் சுத்தமாக இருக்கிறேன்.

பயிற்சி

**1. மனதிற்குள் வாசித்துப் பதில் சொல் :**

1. உன் பெயர் என்ன ?
2. நீ பிறந்த ஊர் எது ?
3. உன் வயது என்ன ?
4. உனக்கு அண்ணன் இருக்கிறுனு ?
5. உனக்கு எத்தனை தங்கைகள் ?

**2. விட்ட சொற்களை எழுது :**

1. என் பெயர் ——.
2. நான் படிப்பது —— வகுப்பு.

# 12. விளையாட்டுச் சாமான்கள்



இதோ ஒரு சிறு பெண். இவள் பெயர் கமலம். இவளுக்கு விளையாட்டில் ஆசை.

இவள் மர ஆனை, மரப்பாய்ச்சி, ரப்பர்க் கிளி, ஊதல், மண் பொம்மை, தகர ரயில் வண்டி, தகர மோட்டார் வண்டி, குடம், செம்பு இவைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறாள்.

இவள் வீடு கட்டி விளையாடுவாள்.

இவள் ஊதலை ஊதுவாள்; சத்தம் கேட்கும்.

வில் கப்பியைத் திருகி, ரயிலையும் மோட்டாரையும் ஓடச் செய்வாள்.

ரப்பர்க் கிளியை அமுக்குவாள். அது "கீச்! கீச்!" என்று கத்தும்.

இவள் மரப்பாய்ச்சியைத் தன் குழந்தை என்று சொல்லுகிறாள். அதை மடியில் வைத்து, பாட்டுச் சொல்லி ஆட்டுகிறாள்.

ஆனே, ஆனே, அரசர் ஆனே ;
அரசரும் அரசியும் ஏறும் ஆனே ;
கட்டிக் கரும்பை முறிக்கும் ஆனே ;
காவேரி நீரைக் கலக்கும் ஆனே ;
கலக்கிக் கலக்கிக் குடிக்கும் ஆனே ;
கடை வீதி எல்லாம் சுற்றும் ஆனே ;
குட்டி யானைக்குக் கொம்பு முளைத்தது ;
பட்டண மெல்லாம் பார்க்க வாருங்கள்.

பயிற்சி

**1. விட்ட சொற்களை எழுது :**

ரப்பர்க் கிளியை —. அது — — என்று கத்தும். இவள் ஊதலை —.

**2. கேள்விகள் :**

1. கமலம் எப்படிப் பொம்மை மோட்டாரை ஓடச் செய்வாள் ?
2. உனக்கு ஆனை மாதிரி ஆடத் தெரியுமா ?
3. மரப்பாய்ச்சியை மடியில் வைத்துக் கமலம் என்ன செய்வாள் ?

**3. செய் :**

1. பூவரசு இலையால் ஊதல் செய்.
2. கொட்டைப் பாக்கு, தென்னங் குரும்பை இவைகளில் ஈர்க்கைச் செருகி, பம்பரம் செய்து விடு.

# 13. எங்கே காணலாம்?

வண்டியை நிறுத்த
சங்கிலியை இழு.
அகாரணமாய் உபயோகப்படுத்துகிறவர்களுக்கு
அபராதம் ரூபாய் 50.

வீடு
வாடகைக்கு
விடப்படும்.

தீபாவளி! தீபாவளி!!
கதர் வாங்குங்கள்!
கதர் கட்டுங்கள்.

இங்கு கைக்குத்தல் அரிசி
விற்கப்படும்.

திருவண்ணாமலை கார்த்திகைதீபம்
மாட்டுச்சந்தை நடைபெறும்.
வாருங்கள்! பாருங்கள்!!

1. இவைகள் ஒவ்வொன்றையும் எங்கே காணலாம்?
   1. *ரயில் வண்டியிலா?*
   2. *அரிசிக் கடையிலா?*
   3. *ரயில் ஸ்டேஷனிலா?*
   4. *குடியில்லாத வீட்டிலா?*
   5. *ஜவுளிக் கடையிலா?*
2. இவைகளின் எண்களை மேலே சரியான இடங்களில் குறி.
3. கோடுகள் போட்டு, படத்தில் எழுதியிருப்பதுபோல் பார்த்து எழுது.



# 14. வீடு

இது ஒரு வீடு. இந்த வீடு செங்கல் வீடு. இந்த வீட்டின் முன் பக்கத்தில் திண்ணையும் வாசற் படியும் இருக்கின்றன.

உட்புறத்தில் சமையலறை, சாமான் அறை, படுக்கையறை முதலிய இடங்கள் இருக்கின்றன. பின்புறத்தில் கிணறும், தோட்டமும், மாட்டுக் கொட்டிலும் உண்டு. சுவரில் பெரிய சன்னல்கள் இருக்கின்றன.

வெயில் படாமலும், மழையில் நனையாமலும் நாம் தங்கியிருக்க வீடு வேண்டும். வீட்டில் நாம் விளையாடுகிறோம், படிக்கிறோம், சாப்பிடுகிறோம், தூங்குகிறோம். வீடு இல்லாவிட்டால் நாம் கஷ்டப் படுவோம் அல்லவா ?

வீட்டை நாம் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும். குப்பைகளைக் கண்ட இடத்தில் போடக்

கூடாது. தண்ணீரைத் தரையில் சிந்தக்கூடாது. வெளிச்சமும் காற்றும் வர, சன்னல்களைத் திறந்து வைக்கவேண்டும்.

பயிற்சி

1. **கேள்விகள் :**

உன் வீட்டில் கிணறு இருக்கிறதா?
சன்னல்கள் எதற்காக?
உன் வீட்டில் எத்தனை அறைகள்?
உன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்? வரிசையாக எழுது.

2. **இந்தப் பாடத்தில் 'ங்', 'ற்', 'ட்' வரும் சொற்களை எழுது**

2. **படம் பிடித்தல் :**




இந்தப் படத்தைப் படி. இதில் காட்டியுள்ள வீட்டின் பாகங்களின் பெயர்களை எடுத்து எழுது.

# 15. உண்டு : இல்லை

உபாத்தியாயர் 100 வரையில் எண்ணுவார். அதற்குள் நீ இந்தப் பன்னிரண்டு கேள்விகளையும் மௌனமாகப் படித்து ஒவ்வொன்றுக்கு எதிரில் 'உண்டு' அல்லது 'இல்லை' என்று எழுது :—

மாதிரி :—இரவில் சூரியன் உண்டா? (இல்லை)

1. உனக்குத் தம்பி உண்டா?
2. நீ இன்று எண்ணெய் தேய்த்துக் கொண்டது உண்டா?
3. உன் வீட்டில் பசு உண்டா?
4. நீ ரயில் வண்டி பார்த்தது உண்டா?
5. நீ திருவிழாவுக்குப் போனது உண்டா?
6. மல்லிகைப் பூவுக்கு வாசனை உண்டா?
7. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் உண்டா?
8. உன் ஊரில் தபால் ஆபீசு உண்டா?
9. குதிரைக்குக் கொம்பு உண்டா?
10. நேற்று மழை உண்டா?
11. செடிக்கு வேர் உண்டா?
12. தென்னை மரத்துக்குக் கிளைகள் உண்டா?

# 16. செல்லப் பிராணிகள்



நான் ஒரு நாயை வளர்த்து வருகிறேன். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அதைத் தினமும் குளிப்பாட்டுவேன். வேளாவேளையில் அதற்குச் சாதம் போடுவேன். அது ஓடி விளையாடும். வீடு காக்கும்.



இந்தப் பூனைக்குட்டியை என் தங்கை வளர்க்கிறாள். அது வெள்ளை நிறம். அதை மடியில் வைத்துக் கொஞ்சுவாள். அதற்குப் பாலும் சாதமும் போடுவாள். அது எலி பிடிக்கும்.



என் அக்காள் ஒரு கிளி வளர்க்கிறாள். அதன் நிறம் பச்சை. அதற்குப் பாலும் பழமும் கொடுப்பாள். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

என் வீட்டில் பசு, எருமை, வண்டி மாடு, ஆடு, கோழி, புறா இவைகளையும் வளர்க்கிறோம். அவைகளுக்கு வேளாவேளையில் தீனி போட்டுத் தண்ணீர் காட்டுகிறோம். ஆடு மாடுகள் படுக்க நல்ல இடம் வைத்திருக்கிறோம். அவைகளிடத்தில் அன்பாய் இருக்கிறோம்.

பூனை சீறும். 'மியா மியா' என்று கத்தும்.

நாய் 'வெள் வெள்' என்று குரைக்கும்.

பசு 'அம்மா' என்று கதறும்.

ஆடு 'மே-மே' என்று கத்தும்.

காகம் 'கா கா' என்று கரையும்.

குதிரை கனைக்கும். பன்றி உறுமும்.

நரி ஊளையிடும். எலி கீச்சிடும்.

கோழி கூவும்.

பயிற்சி

**1. கேள்விகள் :**

*1.* பால் கொடுக்கும் பிராணிகள் மூன்று சொல்.

*2.* வண்டி இழுக்கும் பிராணிகள் இரண்டு சொல்.

*3.* வீடு காக்கும் பிராணி ஒன்று சொல்.

*4.* உன் வீட்டில் இல்லாததை அடித்துவிடு:

— பசு, எருமை, வண்டி மாடு, நாய், பூனை, கிளி, ஆடு, கோழி, மயில், வாத்து.

**2. சத்தம் செய்யாமல் படி. பிறகு பதில் சொல்.**

*1.* பூனை எப்படிக் கத்தும்?

*2.* நாய் எப்படிக் குரைக்கும்?

*3.* ஆடு எப்படிக் கத்தும்?

*4.* கோழி எப்படிக் கூவும்?

*5.* வாத்து எப்படிக் கத்தும்?

# 17. பூனைக்குட்டிகள் (பாட்டு)

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!
பிள்ளைகள் பெற்றதப் பூனை—இவை
பேருக் கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி.

எந்த நிறம் இருந்தாலும்—அவை
யாவும் ஒரு தரம் அன்றோ?
இந்த நிறம் சிறிதென்றும்—இஃது
ஏற்ற மென்றுஞ் சொல்லலாமோ?

பயிற்சி

**1. தெரிந்துகொள் :**

1. பால் **வெள்ளை** நிறம். புல் **பச்சை** நிறம்.
   காகம் **கறுப்பு** நிறம். வானம் **நீல** நிறம்.
   மிளகாய்ப் பழம் **சிவப்பு** நிறம்.
   எலுமிச்சம்பழம் **மஞ்சள்** நிறம்.
2. இஃது = இது. நிறம் = வர்ணம்.
   ஃ இந்த எழுத்தைக் கவனி.

**2. கேள்விகள் :**

1. பாடத்தில் சொல்லப்பட்ட பூனைக்கு எத்தனை குட்டிகள்?

2. சாந்து என்ன நிறம்? நீ சாந்துப்பொட்டு வைத்துக் கொள்வது உண்டா?



## 18. நரியும் பூனையும்

நரி:—பூனையாரே! சௌக்கியமா?

பூனை:—சௌக்கியந்தான். நீரும் க்ஷேமந்தானே?

நரி:—க்ஷேமந்தான். ஆனால் வேட்டை நாய்களைக் கண்டால்தான் பயம் உண்டாகிறது.

பூனை:—ஆமாம்; எனக்கும் அப்படியே. என்னைக் கண்டாலும் அவைகள் துரத்திப் பிடிக்க வருகின்றன.

நரி:—நாய்களிடம் அகப்படாமல் தப்பித்துக் கொள்ள வழிகள் தெரியாதா உனக்கு?

பூனை:—ஒரே ஒருவழிதான் தெரியும். அவைகளுக்கு எட்டாமல் உயர ஏறித் தப்பித்துக்கொள்வேன். நீர் என்ன செய்வீர்?

நரி:—எனக்கென்ன! தப்பித்துக்கொள்ள எத்தனையோ வழிகள் தெரியும்.

பூனை:—வேட்டை நாய்களின் சத்தம் கேட்கிறது போல் இருக்கிறதே!

நரி:—ஆமாம். ஐயோ! என்ன செய்வேன்?

பூனை:—நான் இந்த மரத்தில் ஏறிக்கொள்கிறேன்.

நரி:—ஐயையோ! நாய்கள் அருகில் வந்து விட்டனவே! என்ன செய்வேன்?

நாய்கள்:—அகப்பட்டுக்கொண்டாயா?

பூனை:—என், நரியாரே. எத்தனையோ வழிகள் தெரியும் என்று வீண் பெருமை பேசினீரே! ஐயோ பாவம், அகப்பட்டுக்கொண்டீரே! ஒன்றானாலும் நன்றாகத் தெரியவேண்டும்.

பயிற்சி

**1. வாக்கியங்களில் வைத்து எழுது:**

சௌக்கியம், பயம், எட்டாமல், வழி.

**2. விளையாட்டு:**

மூன்று பேர் நில்லுங்கள். ஒருவன் நரி, ஒருவன் பூனை, ஒருவன் வேட்டை நாய் என்று நினைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கதையை நடித்துக் காட்டுங்கள்.

# 19. வீட்டுச் சாமான்கள்



தாயார் அடுப்பில் நெருப்பு மூட்டுவாள்.
பானையில் சாதம் சமைப்பாள்.
சட்டியில் குழம்பும் ரசமும் செய்வாள்.
அம்மியில் துவையல் அரைப்பாள்.
குடத்தில் தண்ணீர் மொண்டு வருவாள்.
தவலையில் வெந்நீர் போடுவாள்.
அகப்பைக் கூட்டில் கரண்டிகள் வைக்கலாம்.
கூஜாவிலுள்ள ஜலத்தை டம்ளரால் குடிக்கலாம்.
விளக்கு வெளிச்சம் தரும்.

**பானை மண்ணால் ஆனது.**
**அம்மி கல்லால் ஆனது.**
**குடம் பித்தளையால் ஆனது.**
**உரல் மரத்தால் ஆனது.**
**கூஜா வெண்கலத்தால் ஆனது.**
**கூடை மூங்கிற் சிம்புகளால் ஆனது.**



குதிரில் நெல் இருக்கும்.
கூடையில் நெல்லை அள்ளலாம்.
சல்லடையால் சலிக்கலாம்
உரலில் நெல் குத்தலாம்.
முறத்தால் அரிசியைப் புடைக்கலாம்.
எந்திரத்தால் மாவு அரைக்கலாம்.
தொட்டிலில் குழந்தை தூங்குகிறது.
கட்டிலில் பாயும் தலையணையும் இருக்கும்.
பணமும் நகையும் பெட்டியில் வைக்கலாம்.



## பயிற்சி

1. இரண்டாவது மூன்றாவது படங்களில் பாடத்தில் சொல்லியிராத 4 சாமான்கள் இருக்கின்றன. அவைகளைக் கண்டுபிடித்துச் சொல்.

2. **பூர்த்தி செய் :**

சட்டியில் குழம்பும்—செய்வாள். குதிரில்—வைத்திருக்கும். முறத்தால் அரிசியைம்—. பெட்டியில்— வைக்கலாம்.

3. சமையல் அறையில் இருக்கக் கூடிய பத்து சாமான்களை எழுது.

# 20. குழந்தைப் பாட்டு

பட்டணத்துக்குப் போகலாம்
பட்டு ஆடை வாங்கலாம்
இடுப்பிலே கட்டலாம்
ஜில் ஜில் நடக்கலாம்.

தஞ்சாவூர் போகலாம்
தந்தச் சீப்பு வாங்கலாம்
தலையை நன்றாய் வாரலாம்
ஜாம் ஜாம் நடக்கலாம்.

மதுரைக்குப் போகலாம்
மல்லிகைப் பூ வாங்கலாம்
தலையில் அழகாய்த் தரிக்கலாம்
ஜோர் ஜோர் நடக்கலாம்.

திண்டுக்கல் போகலாம்
திருகு கூஜா வாங்கலாம்
தண்ணீர் குடிக்கலாம்
டாக் டாக் நடக்கலாம்.

பயிற்சி

1. ஆறு ஊர்களின் பெயர்களை எழுது.
2. ஆறு பையன்களின் பெயர்களை எழுது.
3. ஆறு பெண்களின் பெயர்களை எழுது.

## 21. தாயும் மகனும்

தாயார் :—சுந்தரம்! பொழுது விடிந்தது; படுக்கையை விட்டு எழுந்திரு.

சுந்தரம் :—எழுந்துவிட்டேன், அம்மா! படுக்கையைச் சுருட்டி வைக்கிறேன்.

தாயார் :—பல் விளக்கி, முகம் கழுவிச் சீக்கிரம் வா.

சுந்தரம் :—பல் விளக்க என்ன இருக்கிறது?

தாயார் :—இதோ! ஆலம் விழுது இருக்கிறது.

சுந்தரம் :—பல் தேய்த்து வாய் கொப்பளித்து விட்டேன்.

தாயார் :—அதிகாலையில் குளிப்பது நல்லது. அழுக்குப் போக உடலைத் தேய்த்துக் குளி.

சுந்தரம் :— அப்படியே செய்கிறேன்.

தாயார் :—தலையையும் உடம்பையும் நன்ருகத் துடைத்துக்கொள். அரைக்குச் சுத்தமான ஆடையும், மேலுக்கு நல்ல சொக்காயும் போட்டுக்கொள்.

சுந்தரம் :—அம்மா! என் தலையை வாரி நெற்றிக்கு இடுங்கள்.

தாயார் :—சரி, சாப்பிட வா. சாப்பிட்ட பிறகு உன் புத்தகம், கற்பலகை இவைகளை எடுத்துக் கொண்டு பாடசாலைக்குப் போய் வா.

பயிற்சி

1. இந்தப் பாடத்தில் கூறியுள்ள செயல்களை நடித்துக் காட்டு.

2. இந்தப் பாடத்தில் பேசுகிறவர்கள் யார், யார் ?

3. காலையில் பள்ளிக்கூடம் போவதற்கு முன் நீ செய்யும் காரியங்களை வரிசையாகச் சொல்.

4. பாடசாலைக்கு நீ எடுத்துச் செல்லும் பொருள்கள் நான்கு எழுது.

---

# 22. நான் யார் ?

1. பேச்சு இல்லை, பெருமூச்சு விடுவேன்
உயிரில்லை, ஓடித் திரிவேன்
காலில்லை, காதம் நடப்பேன்
சாதமில்லை, தண்ணீர் குடிப்பேன்
கண்ட துண்டமாய்க் கரியைத் தின்பேன்.
(ரயில்)

2. என்னைப் பார்த்தால் உன்னைப் பார்ப்பாய்.
(கண்ணாடி)

3. தரையில் கிடப்பேன், பசுமையா யிருப்பேன்,
ஆடு மாடுகளுக்கு உணவாவேன்.
(புல்)

4. என்னை அடிப்பார்கள், உதைப்பார்கள், வீசி
எறிவார்கள், உருண்டையாய் இருப்பேன்.
(பந்து)



## 23. பாடசாலை

இது ஒரு பாடசாலை. இந்தப் பாடசாலையில் ஐந்து வகுப்புக்கள் இருக்கின்றன. இதில் முப்பது பெண்களும், ஐம்பது பையன்களும் படிக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு அறை உண்டு. முன்புறத்தில் தோட்டமும், பின்புறத்தில் விளையாடும் இடமும் இருக்கின்றன.

ஒவ்வொரு வகுப்பு அறையிலும் மேசை, நாற்காலி, கரும்பலகை, பெஞ்சுகள் இருக்கின்றன. உபாத்தியாயர் பிள்ளைகளுக்குத் தமிழ் கணக்கு, இயற்கைப் பாடம், பாட்டு, விளையாட்டு, தொழிற்

பயிற்சி முதலிய பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார். பிள்ளைகள் சந்தோஷமாகப் பள்ளிக்கூடம் போகிறார்கள். பாடசாலையைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக்கொள்கிறார்கள்.

பயிற்சி

1. உன் பாடசாலையில் உள்ள வகுப்புக்கள் எத்தனை?

2. உபாத்தியாயர் எதில் உட்காருகிறார்?

3. நீ எதன் மேல் உட்காருகிறாய்?

4. பள்ளிக்கூடத்தில் நீங்கள் என்ன, என்ன பாடங்கள் படிக்கிறீர்கள்?

5. நீங்கள் விளையாடும் விளையாட்டுக்கள் என்ன?

---

## 24. பருத்தி நூல்



ஒரே ஒரு பருத்திக்கொட்டை.

பருத்திக்கொட்டையை என்ன
செய்தாய்?

குழியில் போட்டுத் தண்ணீர்
விட்டேன்.

விதை என்ன செய்தது?

முளைத்துப் பருத்திச் செடியாக
வளர்ந்தது.



செடி என்ன கொடுத்தது!

பஞ்சு கொடுத்தது.

பஞ்சை என்ன செய்தாய்?

ராட்டையில் நூல் நூற்றேன்.



நூலை என்ன செய்தாய்?
சேணியனிடம் கொடுத்தேன்.
சேணியன் என்ன கொடுத்தான்?

கதர்த் துண்டு கொடுத்தான்.
கதர்த் துண்டை என்ன செய்தாய்?

கட்டிக்கொண்டு கலியாணத்திற்குப் போனேன்.

## ராட்டினம்

எல்லோரும் ராட்டினம் சுற்றிடுவோம்
மெல்லிய நூலாக நூற்றிடுவோம்
வேடிக்கையாகப் பாடிடுவோம்
விதவித ஆடைகள் நெய்திடுவோம்
காந்தி மகானை நாம் வாழ்த்திடுவோம்
கைத்தொழில் ஓங்கிடச் செய்திடுவோம்
காந்தி மகான் தந்த ராட்டினமே
ஏழை மக்களைக் காத்திடுமே.

பயிற்சி

புத்தகத்தை மூடிவிட்டு இந்தப் பாடத்தில் வந்த கேள்விகளை மற்றொரு பையனை வரிசையாகக் கேள். அவன் பதில் சொல்லவேண்டும்.

## 25. நடந்ததைச் சொல்லல்

1. மௌனமாகப் படி. புத்தகத்தை மூடு. அம்மா விடம் சொல்வதுபோல் சொல் :—

தோட்டத்தில் வேலி ஓரமாகப் பூப் பறிக்கப் போனேன். காலில் முள் தைத்தது. அழுதேன். பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்த அண்ணன் வந்தான். முள்ளைப் பிடுங்கி எடுத்தான் இரத்தம் வந்தது. இரத்தத்தைத் துடைத்தான். காயத்தைத் துணியால் மூடிக் கட்டினன். வலி நின்றது நானும் அழுவதை நிறுத்தினேன்.

2. மௌனமாகப் படி. புத்தகத்தை மூடு. அப்பா விடம் சொல்வதுபோல் சொல் :—

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் இருந்தது. அதில் ஒரு ஈ விழுந்து தவித்தது. ஜயா பார்த்தாள். உடனே அந்த ஈயைக் குச்சியால் எடுத்துவிட்டாள். ஈ சந்தோஷமாகப் பறந்துபோயிற்று

---

## 26. ஆலமரமும் பூசணிக்கொடியும்

சாலை வழியே ஒரு மனிதன் வெகு தூரம் நடந்துவந்தான். அதனல் அவன் மிகவும் களைப்பு அடைந்தான். ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் சற்றுப் படுத்தான். அவன் உயர அண்ணாந்து பார்த்தான்.

அந்த மரத்தில் அநேக சிறிய பழங்கள் இருந்தன. “சீ! இவ்வளவு பெரிய மரத்தின் பழங்கள் எவ்வளவு சிறியவை! நமது வீட்டுத்தோட்டத்தில்

உள்ள சிறிய பூசணிக்கொடியில் எவ்வளவு பெரிய காய்கள் இருக்கின்றன! இவ்விதம் கடவுள் ஏன் படைத்தார்!'' என்று எண்ணினன்.

இளங்காற்று வீசியது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் தூங்கினன். மரத்திலிருந்து பழங்கள் உதிர்ந்து கீழே விழுந்தன. அவைகளில் ஒரு பழம் அவன் நெற்றியில் விழுந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து பார்த்தான்.

அவன் எழுந்ததும், அருகில் கிடந்த ஆலம் பழத்தைப் பார்த்து, ''அடடா! நான் சொன்னபடி பெரிய பழமாக இருந்தால் இப்போது என் தலை என்னவாக இருக்கும்?'' என்று எண்ணினன். 'கடவுள் ஏற்படுத்தியது நன்ருக இல்லை.' என்று சொன்னது தவறு என்று அவன் அறிந்தான்.

பயிற்சி

**1. கட்டங்களில் பிரித்து எழுது:**

மா, துளசி, அவரை, வெண்டை, பருத்தி, மூங்கில், பூசணி, பூவரசு, பாகல்.

| மரம் | செடி | கொடி |
|---|---|---|
| 1. | 1. | 1. |
| 2. | 2. | 2. |
| 3. | 3. | 3. |

**2. கேள்வி:**

ஆலம்பழம் பூசணிக்காயைப் போல் பெரியதாயிருந்தால் என்ன ஆகும்?

# 27. ஆலமரம் (பாட்டு)

ஆற்றங்கரை யோரத்திலே
அழகான ஆலமரம்
காற்றடித்துப் பந்தலிட்டுக்
களிப்பான இடந்தருமே!

பச்சையிலைப் பந்தலைப்போல்
படர்ந்த நல்ல ஆலமரம்
பட்டப் பகல் படுத்திருக்கப்
பரந்த நல்ல நிழல் தருமே!

மாலையில் பிள்ளைகளும்
வேலையால் களைத்தவரும்
சாலையில் நடந்தவரும்
தங்க நல்ல இடந் தருமே!

பயிற்சி

1. ஆலமரம் எங்கே இருக்கிறது?
2. ஆலமரத்தடியில் எவர்கள் தங்குவார்கள்?
3. ஆலிலையை உன் வீட்டில் என்ன செய்கிறார்கள்?
4. ஆலங்குச்சியினால் நீ பல் தேய்ப்பது உண்டா?
5. ஆறு மரங்களின் பெயர் எழுது.
6. ஆலம்பழம் என்ன நிறம்?
7. ஆலிலையின் படம் வரை.



## 28. சூரியன்

சூரியன் உதிப்பதைப் பார்! அது சிவந்த பந்துபோல் அழகாகக் காண்கிறது. சூரியன் தோன்றி மேலே கிளம்பி வரும் வேளையே காலை. பிறகு சூரியன் வானத்தின் உச்சியில் வருகிறது. அந்த வேளையே மத்தியானம். அப்போது வெயில் கடுமையாக இருக்கும். பிறகு சூரியன் மறையும் வேளை மாலை. அப்போது தங்க மயமான ஒரு உருண்டையாக அது தோன்றுகிறதல்லவா? மரங்களின் உச்சியில் வெயில் விழுகிறதைப் பார்.

சூரியன் மறைந்த பிறகு எங்கும் இருட்டாகிறது. அப்போது வீட்டில் விளக்கு ஏற்றுவார்கள். சூரியன் தெரியும் வெளிச்சமான காலம் பகல். சூரியன் மறைந்து இருட்டாக உள்ள காலம் இரவு. ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஒவ்வொரு நாளும் சூரியன் காலையில் தோன்றுகிறது; மாலையில் மறைகிறது.

நாம் காலைச் சூரியனைப் பார்த்து நின்றால் நமது முன்புறம் கிழக்கு; வலது கைப்புறம் தெற்கு; இடது கைப்புறம் வடக்கு; சூரியன் மறையும் திசை மேற்கு. சூரியன் தினமும் கிழக்கில் உதித்து, மேற்கில் அஸ்தமிக்கிறது.

பயிற்சி

1. **கேள்விகள் :**

ஒரு நாள் என்பது என்ன ?
சூரியன் எந்தத் திசையில் மறையும் ?
வானத்தின் உச்சியில் சூரியன் எப்போது வரும் ?

2. **ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியத்தில் வைத்து எழுது**

இராப்பகல், காலை மாலை, கிழக்கு மேற்கு.

3. **மௌனமாகப் படித்துச் செய் :**

சூரியன் உதிக்கும் திசையைக் காட்டு.
மேற்கு நோக்கித் திரும்பு.
தெற்குத் திசையைக் காட்டு.

4. **சரியான வார்த்தையை வைத்து எழுது :**

சூரியன், சந்திரன், நட்சத்திரம்.
பகலில் — வெளிச்சம் தரும்.
இரவில் — — இரண்டும் வெளிச்சம் தரும்.

5. **கற்றுக்கொள் :**

| | | |
|---|---|---|
| வருகிறது | வந்தது | வரும் |
| மறைகிறது | மறைந்தது | மறையும் |

# 29. நாட்கள் : மாதங்கள்

| 1940 | டிசம்பர் | | | | 1940 |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ்வாய் | 3 | 10 | 17 | 24 | 31 |
| புதன் | 4 | 11 | 18 | 25 | * |
| வியாழன் | 5 | 12 | 19 | 26 | * |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | * |
| சனி | 7 | 14 | 21 | 28 | * |

இதைப்போல் உங்கள் வீட்டில் கிழமை காட்டும் 'காலண்டர்' இருக்கிறதா? இதிலுள்ள கிழமைகளைப் படி. இந்த ஏழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம். முப்பது நாட்கள் ஒரு மாதம்.

தமிழ் மாதங்கள்

| | | |
|---|---|---|
| 1. சித்திரை | 5. ஆவணி | 9. மார்கழி |
| 2. வைகாசி | 6. புரட்டாசி | 10. தை |
| 3. ஆனி | 7. ஐப்பசி | 11. மாசி |
| 4. ஆடி | 8. கார்த்திகை | 12. பங்குனி |

இங்கிலீஷ் மாதங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜனவரி | 5 மே | 9. செப்டம்பர் |
| 2. பிப்ரவரி | 6. ஜூன் | 10. அக்டோபர் |
| 3. மார்ச்சு | 7. ஜூலை | 11. நவம்பர் |
| 4. ஏப்ரல் | 8. ஆகஸ்டு | 12. டிசம்பர் |

பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

பயிற்சி

**1. கேள்விகள் :**

1. வாரத்தின் நாட்களை எழுது.

2. இன்று என்ன கிழமை? நாளைக்கு என்ன கிழமை? நேற்று என்ன கிழமை?

3. எந்தக் கிழமையில் பள்ளிக்கூடம் இல்லை?

4. முன் பக்கத்திலுள்ள காலண்டரிலுள்ள மாதம் என்ன?

5. இது என்ன மாதம்? அடுத்த மாதம் எது? போன மாதம் எது?

**2. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தை வைத்து எழுது :**

1. வாரத்தின் முதல் நாள் — கிழமை.
2. — கிழமை வாரத்தின் ஆறுவது நாள்.
3. புதன்கிழமை வாரத்தின் — வது நாள்.
4. ஜனவரி, வருஷத்தின் — மாதம்.
5. ஜுலை மாதம் வருஷத்தின் — வது மாதம்.
6. தமிழ் வருஷத்தின் கடைசி மாதம் —.
7. நேற்றைய தினம் — கிழமை.
8. — மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

**3. செய் :**

காலண்டரில் அச்சிட்டுள்ள 1 முதல் 31 நம்பர்களைச் சரியாகக் கத்தரி. அவைகளை வரிசையாக நீண்ட காகிதத்தில் ஒட்டு. காகிதத்தின் இரண்டு நுனியையும் சிறிய குச்சிகளில் ஒட்டிப் பிறகு சுருட்டு. அந்தச் சுருளை ஒரு காலித் தீப் பெட்டியில் செருகி, தேதிப் பெட்டி செய்.



## 30. படம் படித்தல்

முதல் படத்தைப் பார்! பையனும் பெண்ணும் எங்கிருந்து வருகிறார்கள்? எங்கே போகிறார்கள்? அவர்கள் பின்னால் என்ன வருகிறது?

இரண்டாவது படத்தில் மாடு என்ன செய்கிறது? அண்ணனும் தங்கையும் என்ன செய்கிறார்கள்! ஏன்?

மூன்றாவது படத்தில் பையன் என்ன செய்கிறான்? பெண் எங்கே நிற்கிறாள்? மாடு ஏன் விலகி ஓடுகிறது?

நான்காவது படத்தில் ஒருவன் மாட்டை எப்படிப் பிடிக்கிறான்? பிறகு பையன் அவனிடம் என்ன தெரிவிக்கிறான்?

# 31. மண் பாண்டங்கள்

உனக்கு என்ன என்ன மண் பாண்டங்கள் தெரியும்? பானை, சட்டி, கலயம், தொட்டி, அகல், மண் கூஜா இவைகள் எல்லாம் மண் பாண்டங்கள். மண் பாண்டங்கள் செய்கிறவர்கள் குயவர்கள். இன்று ஒரு குயவன் வீட்டிற்குப் போவோம். அவன் பானை சட்டிகள் செய்வதைப் பார்ப்போம்.

இதோ பார்! களிமண். இதிலுள்ள கல், குச்சி முதலியவைகளைக் குயவன் பொறுக்கி எறிகிறான். அப்புறம் கையால் பிசைகிறான்.



இதோ! குயவன் முன்னால் இருப்பது ஒரு சக்கரம். பிசைந்த மண்ணைச் சக்கரத்தின் மேலே வைக்கிறான். சக்கரத்தைச் சுற்றி விடுகிறான். சக்கரம் சுழலும் போது மண்ணை அமுக்கித் தடவிப் பானை உருவமாகச் செய்கிறான். பிறகு பானையைச் சக்கரத்திலிருந்து பெயர்த்து எடுக்கிறான். கொஞ்ச நேரம் பானையைக் காயவைக்கிறான். பானை சிறிது காய்ந்ததும், அடிப்புறத்தை நன்றாக மூடி, ஒரு சிறு பலகைக் கட்டையால் தட்டித் தட்டிச் சரி செய்கிறான். பிறகு பானையைக் காயவைக்கிறான்.

இவ்விதம் பல பானை, சட்டி முதலியன செய்து அவைகளைச் சூளையில் அடுக்கிச் சுடுகிறான். சூளை ஆறியதும் பானைகளை எடுத்து விற்கிறான்.

இவன் மண் பொம்மைகளும் செய்வான். கிராமத்திலுள்ள முக்கிய தொழிலாளிகளில் குயவனும் ஒருவன்.

பயிற்சி

1. களிமண்ணால் சிறு செப்பு, குடம், அம்மி, குழவி, உரல், உலக்கை, கல் உரல் முதலிய சாமான்கள் செய்.

2. ஆறு மண் பாண்டங்களின் பெயர்களைச் சொல்.

3. கல் அறுக்கும் மரச் சட்டம் ஒன்று வாங்கிக் கல் அறுக்கக் கற்றுக்கொள்.

4. உங்கள் ஊரில் என்ன என்ன தொழிலாளிகள் இருக்கிறார்கள் ?

# 33. காற்றாடி செய்தல்

குறிப்பு :—ஒரு சாண் நீளம், ஒரு சாண் அகலமுள்ள சதுரத் துண்டுக் காகிதங்களைக் கிழித்து உபாத்தியாயர் பிள்ளைக்கு ஒன்றாகக் கொடுக்கவேண்டும். ஒரு அடி நீளமுள்ள பூவரசங்குச்சி அல்லது சோளத் தட்டையும், தென்னை ஈர்க்கும் ஒவ்வொரு பிள்ளையும் கொண்டுவரவேண்டும்.

படித்துச் செய் :—




படம் 1.

1. முதல் படத்தில் காட்டியபடி காகிதத்தின் நான்கு மூலையிலும் 1, 2, 3, 4 என்று எழுது. பிறகு 1-ஐ 3-ன் மேல் வைத்துக் குறுக்காக மடி. அதே விதம் 2-ஐ 4-ன் மேல் வைத்து மடி.

2. இரண்டாவது படத்தில் காட்டியபடி மடிப்புக் கோட்டின் வழியாக நடுவரையில் காகிதத்தைச் சுத்தமாகக் கிழி. 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்று கிழித்த மூலைகளில் வரிசையாக எழுது.




படம் 2.

3. மூன்றாம் படத்தில் காட்டியபடி 1, 3, 5, 7 மூலைகளை நடுவில் மடித்து வை. அந்த இடத்தில் கூர்மையான ஈர்க்கு நுனியைச் செருகிப் பிடித்துக்கொள். ஈர்க்கின் ஒரு நுனியில் ஒரு குச்சித் துண்டைச் செருகு. மற்றொரு நுனியைப் பூவரசங் குச்சியில் செருகு. இப்பொழுது இது ஒரு காற்றாடி. குச்சியைக் கையால் பிடித்துக்கொண்டு, காற்றாடியைக் காற்றுக்கு எதிராகப் பிடி. எவ்வளவு ஜோராகச் சுற்றுகிறது பார்!



படம் 3.

பயிற்சி

1. செய்:
   1. காகிதத்தினால் கப்பல் செய்.
   2. ஓலையால் காற்றாடி செய்.
   3. பாடத்திலுள்ள படங்களை வரைந்து, இலக்கங்களைக் குறி.
2. வாக்கியங்களில் வைத்து எழுது:

காற்றாடி, நுனி, மடி, செருகு, கிழி.



# 34. பொங்கல் பண்டிகை

நமது நாட்டில் பொங்கல் பண்டிகை ஒரு பெரிய பண்டிகை. பொங்கல் பண்டிகையைச் சங்கிராந்தி என்றும் சொல்லுவார்கள். அது ஒவ்வொரு வருஷமும் தை மாதம் முதல் தேதியில் வரும். அப்பொழுது இந்துக்கள் வீடுகளைச் சுத்தம் செய்வார்கள்; சுவர்களுக்கு வெள்ளையடிப்பார்கள்; தரையை மெழுகிக் கோலம் போட்டு அலங்காரம் செய்வார்கள்; புதிய பாண்டங்களை வாங்குவார்கள்; புதிய தானியங்களைச் சமைப்பார்கள்; இவைகள் நல்ல சுகாதார எற்பாடுகள் அல்லவா?

பொங்கல் பண்டிகை தினம் சூரியனைப் பூஜை செய்வது வழக்கம். அந்தப் பூஜையில் கரும்பு, தேங்காய், வாழைப்பழம், மஞ்சள் கொத்து, சர்க்கரைப் பொங்கல் முதலியன படைப்பார்கள். பொங்கலுக்கு முந்திய நாள் போகிப் பண்டிகை; மறு நாள் மாட்டுப் பொங்கல். மாட்டுப் பொங்கல் தினம் பசு மாட்டைப் பூஜை செய்வார்கள். அன்று சாயங் காலம் மாடுகளை அலங்கரித்து ஓடவிடுவார்கள்.

பயிற்சி

**1. கேள்விகள் :**

1. பொங்கல் பண்டிகைக்கு வேறொரு பெயர் என்ன?
2. அது எப்போது வரும்?
3. பொங்கல் பண்டிகையின்போது வீடுகளை என்ன செய்வார்கள்?
4. பொங்கல் பண்டிகையில் சூரியனுக்குப் படைக்கும் பொருள்களை எழுது.
5. சங்கராந்திக்கு முதல் நாள் என்ன பண்டிகை?
6. மாட்டுப்பொங்கல் தினம் என்ன செய்வார்கள்?

**2. வாக்கியத்தில் வைத்து எழுது :**

சத்தம், அலங்காரம், பூஜை, தேதி.

**3. பூர்த்தி செய்து எழுது :**

பொங்கல் பண்டிகை. போகிப் ————.

தீபாவளிப் ————. ஜனவரிப் ————.

நவராத்திரிப் ————.

# 35. குதிரை விளையாட்டு

**மணி:**—ராமு, பள்ளிக்கூடம் விடப்பட்டது. நாம் விளையாடப் போவோம்.

**ராமு:**—என்ன விளையாட்டு விளையாடலாம்? கோலி விளையாடுவோமா?

**மணி:**—அது வேண்டாம்; கைகள் அழுக்காகும். அதோ! மாணிக்கம், லீலா, கமலம், சுந்தரம், ஜான், உசேன், முத்து இவர்கள் வருகிறார்கள். எல்லோரும் சேர்ந்து இன்று குதிரை விளையாட்டு விளையாடுவோம்.

**உசேன்:**—கமலமும் லீலாவும் ஒரு ஜோடி. நீங்களும் ஜோடி ஜோடியாக நில்லுங்கள். ஒருவர் குதிரை; இன்னொருவர் குதிரை ஓட்டுகிறவர். குதிரையின் தோளில் துணியைக் கடிவாளம்போல் மாட்டிப் பிடித்துக்கொள்ளுங்கள். இப்போது எல்லோரும் தயாரா?

**ஜான்:**—இரு. முத்துவும் ராமுவும் முன்னால் போய் நிற்கிறார்கள்.

**உசேன்:**—இந்தக் கோட்டில் எல்லாக் குதிரைகளும் வரிசையாக நிற்கவேண்டும். நான் ஊதலை ஊதியதும், நீங்கள் வேகமாக ஓடி அந்த மரத்தைச் சுற்றிக்கொண்டு வரவேண்டும். தெரியுமா?

**கமலம்:**—எல்லோரும் தயார்.

146857



(உசேன் ஊதலை ஊதுகிறான். எல்லோரும் கனைத்துக்கொண்டும், காலைத் தட்டிக்கொண்டும் ஓடித் திரும்பிவருகிறார்கள்.)

உசேன் :—மணியும் ஜானும் முதல். கமலாவும் லீலாவும் இரண்டாவது. மற்ற ஜோடிகள் உபயோகமில்லை.

சுந்தரம் :—என் குதிரை (மாணிக்கம்) சரியாக ஓட்டவில்லை. வழியில் இடறி விழுந்துவிட்டது. இப்போது ஜோடியை மாற்றி இன்னொரு தடவை ஓடுவோம்.

உசேன் :—மாணிக்கம்! நீ இங்கே வந்து பந்தயத்தை விடு. நான் ஓடுகிறேன்.

பயிற்சி

**1. கேள்விகள் :**

*1.* என் கோலி விளையாடக்கூடாது?

2 குதிரை விளையாட்டில் கடிவாளமாக வேறு எதை உபயோகிக்கலாம்?

3. உனக்குத் தெரிந்த மூன்று விளையாட்டுக்கள் சொல்.

**2 தெரிந்துகொள் :**

i. ஜோடி = இரண்டு

ஒரு ஜோடி மாடு ஒரு ஜோடி செருப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | மகன் | - மகள் | ஒருவன் | - ஒருத்தி |
| | தந்தை | - தாய் | தம்பி | - தங்கை |
| | அண்ணன் | - அக்காள் | பையன் | - பெண் |

TB
031(2) N48

# 36. உணவு

நாம் பல வகை உணவுப்பொருள்களை உண்கிறோம். அவைகளில் முக்கியமானது சாதம். நெல்லைக் குத்தினால் அரிசியாகும். அரிசியைச் சமைத்தால் சாதம் ஆகும்.

நெல் ஒருவிதத் தானியம். தானியங்களில் அநேகம் இருக்கின்றன. சோளம், கேழ்வரகு முதலியனவும் தானியங்களே. இந்தத் தானிய உணவுகளை நீ சாப்பிட்டிருக்கிறாயா?

துவரையை உடைத்தால் துவரம் பருப்பும், உளுந்தை உடைத்தால் உளுத்தம் பருப்பும் ஆகும். துவரை, உளுந்து, கடலை, பயறு இவைகள் பருப்புத் தானியங்கள்.

நாம் காய்கறிகளையும் உண்கிறோம். வாழைக்காய், கத்தரிக்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம் இவைகளைச் சமைத்துச் சாப்பிடுகிறோம். காய்கறிகள் இல்லாவிடில் உணவு ருசியாக இராது. ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் தனித்தனியான சுவை உண்டு. இனிப்பு, கசப்பு, புளிப்பு, உறைப்பு இந்த ஒவ்வொரு சுவைக்கும் ஒரு பதார்த்தம் சொல்.

பழங்களும் நமக்கு நல்ல உணவு ஆகும்.



உனக்கு என்ன பழங்கள் தெரியும்? வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் இவைகள் சாதாரணமாய்க் கிடைக்கும்.

நாம் சுத்தமான உணவையே உட்கொள்ள வேண்டும். அதுவும் மிதமாய் இருக்கவேண்டும். வேகாத சாதம், பருப்பு இவைகளைச் சாப்பிடக் கூடாது. பழுக்காத காய்களையும், அழுகிய பழங் களையும் தின்னக்கூடாது.

உணவைப் பற்களால் நன்ருக மென்று, அவசரப்படாமல் சாப்பிடுவதே சுகம் தரும். எதையும் சாப்பாட்டு வேளையில் தவிரத் தின்னக் கூடாது. பால் சாப்பிடுவதாயிருந்தாலும் அதைத் தக்க காலத்தில் சாப்பிடுவதே நல்லது.

பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.

பயிற்சி

1. **கேள்விகள் :**

   1. தானியங்கள் நான்கின் பெயர்களை எழுது.
   2. உனக்கு எந்தப் பழத்தில் அதிக ஆசை?
   3. இன்று உன் வீட்டில் என்ன சமையல்?

2. **பூர்த்திசெய் :**

   1. துவரை, ——, —— இவை பருப்புத் தானியங்கள்.
   2. வாழைக்காய், கத்தரிக்காய் இவை ——.
   3. உணவைட் —— நன்ருக மென்று, —— சாப்பிடுவதே —— தரும்.

3. **செய் :**

களிமண்ணுல் கத்தரிக்காய், மாங்காய், வாழைக்காய் செய்.

# 37. தின்னலாம் : தின்னக்கூடாது

1.

| தின்னலாம் | தின்னக்கூடாது |
|---|---|
| ஆப்பம் | துணி |
| முறுக்கு | நகம் |
| கரும்பு | சாம்பல் |
| மிட்டாய் | காகிதம் |

2. எதைத் தின்னக்கூடாது? அதற்கு எதிரில் இந்தக் குறி × போடு.

| | |
|---|---|
| சுண்டல் | ஈ மொய்த்த பட்சணம் |
| சூச்சி | பாக்கு |
| அவல் | மண் |
| இட்டலி | அழுகிய பழம் |
| தோசை | நெய் |
| நூல் | வெல்லம் |
| வடை | வாழைப்பழத் தோல் |

3. தெரிந்துகொள்:

சர்க்கரை இனிக்கும்.

புளியங்காய் புளிக்கும்.

வேப்பிலை கசக்கும்.

உப்பு கரிக்கும்.

மிளகு உறைக்கும்.

பாக்கு துவர்க்கும்.

## 38. உண்மையுள்ள கனகம்

மலையூர் என்னும் கிராமத்தில் மருதப்ப முதலியார் என்று ஒருவர் இருந்தார். அவர் பணக்காரர்; மிகவும் நல்லவர். ஏழைகளிடத்தில் அன்பு உள்ளவர். குழந்தைகளிடத்திலும் அவருக்கு ஆசை அதிகம்.

அவர் ஒவ்வொரு நாளும் ஏழைக் குழந்தைகளுக்கு ஆப்பங்கள் கொடுப்பது வழக்கம். ஊரிலுள்ள ஏழைக் குழந்தைகள் எல்லாரும் வருவார்கள். ஒருவர்மேல் ஒருவர் இடித்துக்கொண்டு ஆப்பத்தை வாங்கிக்கொண்டு போவார்கள்.

கனகம் ஓர் ஏழைப் பெண். அவளுக்குத் தகப்பனார் இல்லை. அவளும் அவள் தாயாரும் ஒரு குச்சு வீட்டில் வசித்துவந்தார்கள். கனகமும் முதலியார் வீட்டிற்கு ஆப்பம் வாங்க வருவதுண்டு. ஆனால் அவள் பொறுமையாக இருப்பாள். எல்லாக் குழந்தைகளும் வாங்கிக்கொண்ட பிறகே அவள் ஆப்பத்தைப் பெற்றுக்கொள்வாள்.

ஒரு நாள் ஆப்பத்தை வாங்கிக்கொண்டு கனகம் வீட்டுக்கு வந்தாள். தன் தாயாருக்குப் பாதி கொடுக்க ஆப்பத்தை விண்டாள். என்ன ஆச்சரியம்! ஆப்பத்திலிருந்து ஒரு தங்கக் காசு கலீரென்று கீழே விழுந்தது; பளபளவென்று தோன்றிற்று. அதைக் கண்டதும் கனகம் பயந்து "இந்தக் காசு நம்முடையது அன்று. இதை முதலியாரிடம் கொடுத்து வருகிறேன்." என்று சொன்னாள். தாயாரும் "அது தான் சரி. உடனே ஓடு." என்றாள்.

கனகம் முதலியாரிடம் போய், "ஐயா, தாங்கள் கொடுத்த ஆப்பத்தை வீட்டிற்குக் கொண்டுபோய் விண்டேன். அதிலிருந்து இந்தக் காசு விழுந்தது. இதை எடுத்துக்கொள்ளுங்கள்." என்று சொல்லி, காசைக் கொடுத்தாள்.

முதலியார் மிக்க சந்தோஷம் அடைந்தார். அவர் கனகத்தைப் பார்த்து, "குழந்தாய், உனது நல்ல குணத்தையும் பொறுமையையும் தினமும் கவனித்துவந்தேன். வேண்டுமென்றே இந்தப் பொன் காசை ஆப்பத்தில் வைத்திருந்தேன். அதை நீயே எடுத்துக்கொள்." என்று சொன்னார். கனகம் சந்தோஷமாகத் தங்கக் காசைத் தன் தாயாரிடம் கொண்டுபோய்க் கொடுத்தாள்.

பயிற்சி

1. மருதப்ப முதலியார் தினம் என்ன செய்வது வழக்கம்?

2. கனகத்தினிடம் என்ன நல்ல குணம் இருந்தது?

3. ஒரு நாள் முதலியார் என்ன செய்தார்?

4. கனகம் உண்மையுள்ளவள். இது எதனுல் தெரிகிறது?

5. பெயர் எழுதிய புத்தகம் ஒன்று வழியில் உனக்கு அகப்படுகிறது. அதை நீ என்ன செய்வாய்?

— நீயே எடுத்துக்கொள்வாயா? சொந்தக்காரனைத் தேடிக் கொடுப்பாயா? அல்லது கிழித்து விட்டெறிவாயா?

# 39. உலாவுதல்

நேற்று சாயங்காலம் உபாத்தியாயரும் நாங்களும் ஊரைச் சுற்றி உலாவிவந்தோம். அப்பொழுது அநேக விஷயங்களைப் பார்த்து அறிந்தோம். தெருக்கள் வழியாகப் போகும்போது ஒருவர் பின் ஒருவராக வரிசையாகவும் ஒழுங்காகவும் சென்றோம்.

போகும் வழியில் சில கல் வீடுகளும், பல மண் வீடுகளும் காணப்பட்டன. கிராமக் கடையில் சிறிது நேரம் நின்றோம். அங்கே சிலர் உப்பு, புளி, மிளகாய், மண் எண்ணெய் முதலிய சாமான்கள் வாங்கிக்கொண்டிருந்தார்கள்.

பிறகு கோவில் பக்கம் சென்று பார்த்தோம். அங்குள்ள குளத்தில் அல்லியும் தாமரையும் படர்ந்து பூத்து இருந்தன. கோவில் தோட்டத்தில் மல்லிகை, அரளி, ரோஜா முதலியன மலர்ந்து நல்ல வாசனை வீசின. கோவிலைச் சுற்றி வந்து, கட்டடத்தில் இருந்த அழகான பொம்மைகளைப் பார்த்தோம்.

கிராமத்தைச் சுற்றிலுமுள்ள வயல்களையும் தோப்புக்களையும் பார்த்தோம். வயல்களில் நாற்றுக்கள் பசுமையாக வளர்ந்திருந்தன. சில பெண் பிள்ளைகள் பாட்டுப் பாடிக்கொண்டு நாற்று நட்டுக் கொண்டிருந்தார்கள். வாய்க்கால்களில் தண்ணீர் ஓடுவதையும், மடைகளில் தண்ணீர் பாய்வதையும் உற்று நோக்கினோம். மீன்கள் துள்ளியோடுவது

மிகவும் வேடிக்கையாக இருந்தது. பின்பு தென்னந் தோப்புக்களையும், வாழைத் தோட்டங்களையும் சுற்றி வந்தோம். மரங்களில் வந்து அடைந்த பட்சிகள் இனிமையான சத்தம் செய்தன.

வீட்டுக்குத் திரும்பும்போது எங்கும் மஞ்சள் வெயிலாக இருந்தது. காற்று சுகமாக வீசியது. மேற்கில் சூரியன் தங்கப் பந்துபோல் தோன்றிக் கொஞ்சங் கொஞ்சமாக மறைந்தது. உபாத்தியாய ருக்கு வந்தனம் சொல்லிவிட்டு இருட்டுக்கு முன் வீடு திரும்பினோம்.

*பயிற்சி*

**கேள்விகள் :**

*1. கடையில் சிலர் என்ன வாங்கிக்கொண்டிருந்தார்கள்?*

*2. குளம், தோட்டம், கோவில் இவைகளில் என்னென்ன கண்டார்கள்?*

*3. வயலில் பெண் பிள்ளைகள் என்ன செய்துகொண்டிருந் தார்கள்?*

*4. வீடு திரும்பியபோது சூரியன் எவ்விதம் தோன்றியது?*

# 40. உடலின் உறுப்புக்களும் வயிறும்

ஒரு காலத்தில் கை, கால், வாய் முதலிய உறுப்புக்கள் வயிற்றுக்கு விரோதமாகச் சண்டை செய்தன. அவைகள், "வயிறு சும்மா இருக்கிறது. நாம் வருந்தி வேலைசெய்து ஏன் அதற்கு உணவு கொடுக்கவேண்டும்?" என்று சொல்லிக்கொண்டன.

அதனால் கால்கள் வயிற்றைச் சுமந்துகொண்டு நடக்கமாட்டோம் என்றன. கைகள் உணவை வாய்க்குள் எடுத்துக் கொடுக்கமாட்டோம் என்றன. வாய் ஆகாரத்தை விழுங்கமாட்டேன் என்றது. பற்கள் உணவை மெல்லமாட்டோம் என்றன. எந்த உறுப்புக்களுமே வேலைசெய்யவில்லை.

ஆகையால் வயிற்றுக்கு ஆகாரம் கிடைக்கவில்லை. உடல் வரவர மெலிந்துபோயிற்று. கால்களும் சோர்ந்தன. கைகளும் சோர்ந்தன. எல்லா உறுப்புக்களும் சோர்ந்துபோயின. எல்லாம் இறக்க நேரிடும் என்று அறிந்தன.

தான் செய்தது தவறு என்று ஒவ்வொரு உறுப்பும் உணர்ந்தது. 'இனி நாம் சேர்ந்து வாழ்வோம்' என்று அவைகள் தம்தம் வேலைகளை முன்போலச் செய்யத் தொடங்கின. உடல் நல்ல சுகம் அடைந்தது.

பயிற்சி

**1. தெரிந்துகொள்:—**

நாக்கினுல் ருசி பார்க்கிருேம்.
மூக்கினுல் வாசனை அறிகிருேம்.
காதினுல் கேட்கிருேம்.
கண்களால் பார்க்கிருேம்.
வாயினுல் சாப்பிடுகிருேம்.

**2. பொருந்தும்படி சேர்த்து எழுது:—**

| | |
|---|---|
| நான் | செய்தான். |
| நீ | செய்தேன். |
| அவன் | செய்தாள். |
| அவள் | செய்தது. |
| அது | செய்தாய். |

**3. பூர்த்தி செய்:—**

செய்வேன் — செய்யமாட்டேன்
வருவேன் ——
போவேன் ——
ஓடுவேன் ——

**4. கேள்விகள்:—**

1. கால், கை முதலியன ஏன் வயிற்றுடன் சண்டை செய்தன?

2. உறுப்புக்கள் வேலைசெய்யாததால் என்ன நேர்ந்தது?

3. நீ இந்தப் பாடத்தினுல் என்ன தெரிந்துகொள்கிருய்?



## 41. இரண்டு பரதேசிகள்

முதல் பரதேசி:—இந்த ஊரில் மூன்று தினங்கள் தங்கியாகிவிட்டது. ஓடு நமக்கு உண்டு வற்றாத பாத்திரம். ஆதலால் இனி அடுத்த ஊருக்குப் பிச்சையெடுக்கப்போவேன். (அதே பாதையில் மற்றொரு பரதேசி வந்து சேருகிறான். அவனைப் பார்த்து) பரதேசியே! நமஸ்காரம்.

இரண்டாவது பரதேசி:—என்ன ஐயா! நான் ஆண்டி; நீ பெரிய பணக்காரனோ! என்னைப் பரதேசி என்று ஏளனம் செய்கிறாயே?

முதல் பரதேசி:—ஏற்பது இகழ்ச்சியே. பிச்சைக்காரர் பிச்சைக்காரர் தான். இதற்கு ஏன் இவ்வளவு கோபம்? நீயும் என்னைப் பரதேசி என்றே கூப்பிடு. இப்போது எங்கே போகிறாய்?

இரண்டாவது பரதேசி:— அதோ தெரிகிறதே, அந்த ஊருக்குப் போகிறேன். வேண்டுமானால் நீயும் வா இருவரும் சேர்ந்தே போவோம்.

(இருவரும் பின்வரும் பாட்டைப் பாடிக்கொண்டு ஒரு தென்னந் தோப்பு வழியாகப் போகிறார்கள்.)

நந்த வனத்தில் ஓராண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனைவேண்டிக்
கொண்டுவந்தானொரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

(நந்த—)

(காற்றடித்து ஒரு தேங்காய் நெற்று விழுகிறது)

இரண்டாவது பரதேசி:—அதோ பார்! ஒரு தேங்காய் விழுகிறது.

முதல் பரதேசி: — நான் எடுக்கிறேன்.

(ஓடிப்போய்த் தேங்காயை எடுத்துவருகிறான்)

இரண்டாவது பரதேசி:—அதை என்னிடம் கொடுத்துவிடு.

முதல் பரதேசி:— நான்தான் எடுத்தேன். நானே வைத்துக்கொள்வேன்.

இரண்டாவது பரதேசி:— முடியாது; எனக்குத் தான் உரியது. (என்று கையைப் பிடித்து இழுக்கிறான்)

முதல் பரதேசி:— நான கொடுக்கவேமாட்டேன். (இருவரும் சண்டையிடுகிருர்கள். அப்பொழுது வழிப்போக்கன் ஒருவன் வருகிருன்.)

வழிப்போக்கன்:—பரதேசிகளே! நீங்கள் ஏன் சண்டை போடுகிறீர்கள்?

முதல் பரதேசி:—இந்தத் தேங்காய் விழுந்தவுடன் நான் எடுத்தேன். அது தன்னைச் சேர்ந்தது என்று அவன் வழக்காடுகிருன்.

வழிப்போக்கன் (இரண்டாவது பரதேசியைப் பார்த்து):—நீர் என்ன சொல்லுகிறீர்?

இரண்டாவது பரதேசி:—ஐயா! காற்று வீசியது. இந்த நெற்று விழுந்தது. விழுகிறதை நான்தான் முதலில் பார்த்துச் சொன்னேன். இவன் ஓடிப் போய் எடுத்து வந்து, எனக்கு அதைத் தர முடியாது என்கிருன். நீங்கள் நியாயத்தை விசாரித்துத் தீர்த்துவிடுங்கள்.

முதல் பரதேசி:—நீங்கள் தீர்த்துவிடுகிறபடி செய்ய எனக்கும் சம்மதம்.

வழிப்போக்கன் (தேங்காயை வாங்கி மட்டையை உரித்துக் காயை உடைக்கிருன். கொப்பறையைத் தனக்கு வைத்துக் கொள்ளுகிருன். இரண்டாவது பரதேசியைப் பார்த்து):— நீர் தேங்காய் விழும்போது முதலில் பார்த்ததினுல் கண்ணுள்ள இந்தக் கொட்டாங்கச்சியை எடுத்துக் கொள்ளும். கையை ஏந்திப் பிச்சை வாங்குவதைவிட

இந்தக் கொட்டாங்கச்சியில் வாங்குவது நல்லது அல்லவா? (என்று அவன் கையில் அதைக் கொடுத்தான். பிறகு முதல் பரதேசியைப் பார்த்து):—விழுந்த தேங்காயை நீர் எடுத்ததினால், உமக்கு இந்தக் கொட்டாங்கச்சி. நீரும் பிச்சைப் பாத்திரமாக இதை வைத்துக் கொள்ளும். (மற்றொரு கொட்டாங்கச்சியை அவன் கையில் கொடுக்கிறான்.) ஓடு உங்களுக்குப் பிச்சையெடுக்க வற்றாத பாத்திரம். நீங்கள் போகலாம். (பரதேசிகள் போகிறார்கள்.)

வழிப்போக்கன் (தனக்குள்ளே):—பேஷ்! நல்ல வழக்குத் தீர்த்தேன். இந்தத் தேங்காயைச் சர்க்கரையுடன் கலந்து சாப்பிடுவேன். (என்று சொல்லித் தன் வழியே போகிறான்)

பரதேசிகள் (சற்றுத் தூரம் போய்):-ஐயோ! நாம் சண்டையிட்டதால் தேங்காயைக் கண்டெடுத்த நமக்குக் கொட்டாங்கச்சி மட்டுமே. இடையில் வந்த வழிப்போக்கனுக்கோ தேங்காய்ப் பருப்பு! 'வழக்காளி பொருள் இழந்தான்' என்பது நமக்கே பலித்தது.

பயிற்சி

1. கதை நடித்தல் :

மூவர் சேர்ந்து இந்தக் கதையை நடித்துக் காட்டுங்கள்.

2 சொல் விளக்கம் :

ஏற்பது = பிச்சை எடுப்பது
இகழ்ச்சி = இழிவான காரியம்

ஏளனம் = பரிகாசம்

நந்தவனம் = கோவில் தோட்டம்

நாலாறு மாதம் = பத்து மாதம்

வழக்கு = சண்டை

நெற்று = பழுத்துக் காய்ந்த தேங்காய்

**3 கேள்விகள் :**

1. இரண்டாவது பரதேசி 'தேங்காய் தனக்குத்தான் உண்டு' என்று ஏன் சொன்னான்? முதல் பரதேசி என்ன சொன்னான்?

2. வழிப்போக்கன் கொட்டாங்கச்சிகளை எதற்காகப் பரதேசிகளுக்குக் கொடுத்தான்?

3, தேங்காய்க்கு எத்தனை கண்கள்?

**4. வாக்கியங்களில் வைத்து எழுது:**

வழிப்போக்கன், வழக்கு, பிச்சை, கலந்து.

**5. பூர்த்தி செய்:**

1. அதோ பார்! ஒரு —— விழுகிறது.

2. விழுந்த —— நீர் எடுத்ததினால், உமக்கு இந்தக் ——.

3. உங்களுக்குப் பிச்சை —— வற்றாத பாத்திரம்.

146857

## 42. செல்லக் கிளியே!

இன்பம் நிறைந்த என் செல்லக்கிளியே
அன்பாய் என் சொல்லைக்கேள் செல்லக்கிளியே!
காலையில் பாடம் படி செல்லக்கிளியே
மாலையில் விளையாடு செல்லக்கிளியே!
அழுக்கு விலக்கிடு செல்லக்கிளியே
அழகு வளத்திடு செல்லக்கிளியே!
வீண் வம்பு பேசாதே செல்லக்கிளியே
விஷமங்கள் செய்யாதே செல்லக்கிளியே!
பொய்யை நீ சொல்லாதே செல்லக்கிளியே
பிறரை நீ வையாதே செல்லக்கிளியே!
உடலை உறுதிசெய் செல்லக்கிளியே
உண்மையே பேசிடு செல்லக்கிளியே!
ஏழைக்கு இரங்கு நீ செல்லக்கிளியே
எதிரியை விரும்பு நீ செல்லக்கிளியே!
வீரம் வளர்த்திடு செல்லக்கிளியே
தீரப் பேச்சுப் பழகிடு செல்லக்கிளியே!
தாய்தந்தை சொல்கேள் செல்லக்கிளியே
தன்னைப்போல் பிறரை நினை செல்லக்கிளியே!
தேசத்திற்கு உழைத்திடு செல்லக்கிளியே
தெய்வத்தை வணங்கிடு செல்லக்கிளியே!

TB
031(2) N48

2323